அன்புமணியை ஒன்றிய அமைச்சராக்கியது தி.மு.க.

நந்தன் கால்வாயை அமைத்தது, பராமரிப்பது கழக அரசுதான்!

கலைஞர் பிறந்த நாள் விழாவில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, செப். 5 - அன்புமணியை ஒன்றிய அமைச்சராக்கியது தி.மு.க., நந்தன் கால்வாயை அமைத்தது. அதனை தொடர்ந்து பராமரிப்பது கழக அரசுதான். திருவண்ணாமலை மாவட்டத்திற்கு அன்புமணியால் எந்த ஒரு பயனாவது உண்டா? என்று திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு, நலஉதவிகள் வழங்கி, அமைச்சர் எ.வ.வேலு பேசும் போது குறிப்பிட்டார்.

4.9.2025 - புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு, திருவண்ணாமலை மாநகரம், துர்க்கை நம்மியந்தலில் திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு மாநகரச் செயலாளர் ப. கார்த்திவேல்மாறன் தலைமை வகித்தார்.

ஒன்றியச் செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், மாநகர பகுதிச் செயலாளர்கள் அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம். பா.ஷெரீப், முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர் பொன்.கருணாநிதி, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சாந்தி திருவேங்கடம், மாவட்ட துணை அமைப்பாளர்கள் த.பரத், ஆ.தேவராஜன், ஜீவிதா வைத்தியலிங்கம், பா.சற்குணப்பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநகர பகுதிச் செயலாளர் சு.விஜி (எ) விஜயராஜ், அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தையல் இயந்திரம், சலவை பெட்டி, சிகை அலங்காரப் பெட்டகம், இட்லி பாத்திரம், பால் கேன், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை என 1000க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கி அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

நான்கு தினங்களுக்கு முன் வந்த என் நண்பர் அன்புமணி தவறான பல கருத்துக்களை வீசிவிட்டு சென்றிருக்கிறார். இடஒதுக்கீடு கிடைத்தால் அரசு பணிக்கு போக முடியும் என அன்று டாக்டர் அய்யா, அந்த குரலை அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் தொடங்கி வைத்தார்கள். ஆனால், அ.தி.மு.க. ஆட்சியினர் அதற்கு செவி கொடுக்கவில்லை. இடஒதுக்கீடு கொடுக்க முடியாது எனக்கூறி அ.தி.மு.க. ஆட்சியில் 21 பேரை சுட்டு வீழ்த்தினார்கள்.

20 சதவிகித எம்.பி.சி. ஆணையிட்டவர் கலைஞர்!

கலைஞர் ஆட்சிக்கு வந்தார், ஐய்யா டாக்டரை கூப்பிட்டார், கோரிக்கை என்னவென்று கேட்டார். பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு என்று இருக்கிறது. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என ஒரு ஒதுக்கீடு தந்தால் எங்கள் வன்னிய பெருமக்கள் அரசு வேலைக்கு போகமுடியும் என்றார் டாக்டர். அதை உடனடியாக நிறைவேற்றி 20 சதவிகித எம்.பி.சி., என ஆணையை போட்டவர் கலைஞர். அன்றைக்கு சுட்டு வீழ்த்தப்பட்ட 21 பேரின் குடும்பத்திற்கு ஆயிரத்தில் ஆரம்பித்து, இன்றைக்கு 3000 பென்ஷன் வழங்கினார் கலைஞர். அதற்கு பிறகு ஆட்சிக்கு வந்த திராவிட மாடல் நாயகர் தளபதி 21பேருக்கு வளவனூருக்கு அருகே உள்ள வழுதாவூரில் மணிமண்டபத்தையும் கட்டி, சிலை வைத்தார். இதில் எனக்கென்ன பெருமை தெரியுமா? முதல்வர் அவர்கள் என்னை பொதுப்பணித் துறை அமைச்சர் ஆக்கியதால் பொதுப்பணித்துறையின் சார்பில் அந்த சிலைகளையும் கட்டி மணிமண்டபத்தையும் அமைத்த பெருமை என்னை சாரும்.

அதிகாரத்தை என் கையில் கொடுங்கள். நான் நந்தன் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றிக் காட்டுகிறேன் என அன்புமணி கண்ணீர் வடிக்கிறார். நந்தன் கால்வாய் திட்டம் என்றால் என்னவென்று அன்புமணிக்கு தெரியுமா? நான் 1971ல் பொதுக்கூட்ட மேடையிலே பேசுகின்ற போது அன்புமணிக்கு வயது மூன்று. நந்தன் கால்வாய் திட்டத்தைப் பற்றி முதன்முதலாக சட்டசபையில் 1958ல் பேசியவர் கோவிந்தசாமி. பள்ளிகொண்டாப்பட்டிலிருந்து ஆரம்பித்து பனைமலைப் பேட்டை வரை போகும் நந்தன் கால்வாய் என்பது, ஏறத்தாழ 37கி.மீ., தூரம் ஆகும். 36 ஏரிகள் நந்தன் கால்வாய் திட்டம் மூலமாக 7090ஏக்கர் நிலம் பயன்பெறும். கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது தான் 32இலட்ச ரூபாய் நிதியை அதற்காக ஒதுக்கினார்.

வேண்டுமென்றே பொய் சொல்கிறார்கள்!

1978ல் 128 இலட்ச ரூபாயை கால்வாய் சீரமைப்பதற்காக ஒதுக்கினார். விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் இப்பகுதி மக்கள் மீண்டும் நந்தன் கால்வாய் காட்டு வழியாக வருகிறது. மண் சரிவு ஏற்படுகிறது அதை தடுக்க வேண்டும் என மனு கொடுத்தனர். இடைத்தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றவுடன் அந்த மனுவை முதலமைச்சரிடம் எடுத்துச் சென்றோம். 2025-26ம் நிதியாண்டிலேயே சாத்தனூருக்கு மேற்பகுதியிலே வெட்டுவதற்கு பணம் தேவை, விவசாயிகளுக்கு கொடுப்பதற்கும் பணம் தேவை, அதற்காக முதலமைச்சர் ரூபாய் 390 கோடியை ஒதுக்கியுள்ளார். அந்த கோப்பு வருவாய்த் துறை செயலாளர் அதிகாரியிடம் உள்ளது. இன்னும் ஒரு மாத காலத்தில் முதலமைச்சரின் கையெழுத்து போடப்பட்டு ஆணை வெளியிடப்பட உள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் கல்வித்துறையில் குறைந்து இருக்கிறது என்று பொய் சொல்லு கிறார்கள். ஏற்கனவே கல்வித் துறையில் கலைஞர் பதவிக்கு வந்ததும் செய்யாறிலே ஒரு அரசு கல்லூரியில் தொடங்கினார். ஆரணியில் அண்ணா பொறியியல் கல்லூரியை தந்தார். கலசப்பாக்கம் வட்டத்தில் காரப்பட்டில் ஒரு கல்லூரியைத் தந்தார். திராவிட மாடல் நாயகர் செங்கத்திலே கலைக் கல்லூரியை திறந்து உள்ளார். நான் சிறு வயதிலே இருந்தபோது நம் பகுதியில் கல்லூரியே கிடையாது.

கல்லூரிக்கு போக வேண்டும் என்று சொன்னால் சிதம்பரத்திற்கு போக வேண்டும் அல்லது சென்னைக்கு போக வேண்டும், இல்லையென்றால் திருப்பத்தூர் சேக்ரெட் ஆர்ட்ஸ் காலேஜிக்கு தான் போக வேண்டும். இன்றைக்கு திருவண்ணாமலை மாவட்டத்திலே சுற்றிச் சுற்றி கல்லூரி இருக்கிறது என்று சொன்னால் அதற்கு காரணம் தளபதிதான். கல்வித் தரத்தை எங்கே நாங்கள் குறைத்தோம்.

திருவண்ணாமலை மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு நான்தான் தடையாக இருக்கிறேன் என்று அன்புமணி பொய் சொல்லுகிறார். தமிழ்நாட்டிலேயே பெரிய மாவட்டம் சேலம் மாவட்டம் 11 தொகுதி. கோவை மாவட்டம் 10 தொகுதி, திண்டுக்கல் மாவட்டம் 9 தொகுதி, இத்தனை தொகுதிகளையும், மாவட்டங்களையும் பிரித்தால்தானே திருவண்ணாமலைக்கு வருவார்கள். திருவண்ணாமலை தான் தமிழகத்தில் இரண்டாவது பெரிய மாவட்டம் என்று எப்படி பொய் சொல்லுகிறார். நானும் பலமுறை முதல்வரிடம் கேட்டு இருக்கிறேன். எத்தனை மாவட்டங்களில் இவ்வளவு தொகுதிகள் பிரித்த பிறகுதான் உங்களிடம் வர முடியும் என்று கூறினார்.

அது என்ன எங்கள் மாவட்டத்தை உடைப்பதில் அன்புமணிக்கு அவ்வளவு ஆசை. அதிகாரத்தை எங்களிடம் கொடுங்கள். தி.மு.க.விற்கு ஓட்டு போடாதீர்கள் என்று கூறுகிறார். தி.மு.க.விற்கு ஓட்டு போட்டதால் அமைச்சராக முடிந்தது. தி.மு.க.விற்கு ஓட்டு போட்டதால்தான் திண்டிவனம் வெங்கட்ராமன் மத்திய அமைச்சராக முடிந்தது. திமுகவிற்கு ஓட்ட போட்டததால்தான் சேலத்து சிங்கம் வீரபாண்டி ஆறுமுகம் அமைச்சராக முடிந்தது. தி.மு.க.விற்கு ஓட்டு போட்டதால்தான் பொதுச் செயலாளர் துரைமுருகன் அமைச்சராக முடிந்தது. தி.மு.க.விற்கு ஓட்டு போட்டதால்தான் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அமைச்சராக முடிந்தது. சேலம் ராஜேந்திரன் அமைச்சராக முடிந்தது. ஐந்து முறை நாடாளுமன்ற உறுப்பினராக வேணுகோபால் ஆனது தி.மு.க. வால் தான். தி.மு.க.விற்கு ஓட்டு போட்டதனால் தானே ஜெகத்ரட்சகன் அமைச்சரானார், எம்.பி. ஆனார், கடலூர் விஷ்ணுபிரசாத் இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினரானது தி.மு.க.வினால்தானே,

தேர்தலில் வென்றது தி.மு.க.தானே!

மணி என்ற வன்னியரை தி.மு.க. சார்பில், தருமபுரி நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட செய்தபோது, நீங்கள் என்ன சொல்லியிருக்க வேண்டும். வன்னியரை எதிர்த்து நான் வேறு நபரை நிறுத்தமாட்டேன் என்று சொல்லியிருக்க வேண்டும். ஆனால், நீ உன் மனைவி அன்பு சகோதரி சௌமியாவை நிற்கவைத்து தோற்கடிக்கப் பார்த்தாய், ஆனால் வென்றது தி.மு.க. தானே. தி.மு.க.வில் இருக்கும் வன்னியர்களுக்கு பதவிகள், பட்டங்கள் கிடைக்கும். ஆனால், உன்னுடைய கட்சியில் உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களும், நீங்களும் தானே பதவி சுகத்தை அனுபவிக்கிறீர்கள்.

வந்தவாசி சட்டமன்றத் தொகுதி, தனித் தொகுதி என்பதால், நீண்ட கால கட்சிக்காரரான தரணிவேந்தனை நாடாளுமன்ற உறுப்பினராக்கியது தி.மு.க.தான். அன்புமணிக்கு தெம்பு, திராணி இருந்தால் தனியாக தேர்தலில் நின்று, வென்றுக் காட்டட்டும்.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.

பொதுக் கூட்டத்தில் மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், தொ.மு.ச., மாநில கழகத் துணைச் செயலாளர் க.சௌந்தரராசன்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன்.தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர் பிரவீன் ஸ்ரீதரன், சி.பி.பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம் சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம்,

ஒன்றியச் செயலாளர்கள் வி.பி.அண்ணாமலை, கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, து.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, அ.தண்டபானி, துணை மேயர் சு.ராஜாங்கம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.தீலிப்குமார், மாநகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகா விஜயராஜ், இல.குண சேகரன், அ.கண்ணன், கோல்டு எஸ்.பிரபு, ஹக்கிம் சேட் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நகர அணிகளின் நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக கிளைச் செயலாளர் வே.இராஜா நன்றி கூறினார்.

முன்னதாக ஆ.தே.முருகையன் குழுவினரின் நவீன நாடகம் நடைபெற்றது.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, கள்ளக்குறிச்சி ஏ.என்.பி. திருமண மண்டபத்தில் நேற்று (04.09.2025) நடைபெற்ற, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டப் பொருளாளர், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர், ஆதி.கு.கோவிந்தராஜன் இல்ல திருமண விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டு மணமக்கள் கோ.முருகன் மற்றும் வி.துர்கா ஆகியோரை வாழ்த்தினார். இவ்விழாவில் கள்ளக்குறிச்சி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டச் செயலாளர்கள் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தா.உதயசூரியன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், கள்ளக்குறிச்சி எம்.பி. தே.மலையரசன், தொகுதி பொறுப்பாளர்கள் ச.அ.பெருநற்கிள்ளி, ஸ்ரீதர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் இந்த திருமண விழாவில், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்து!

முதல் பக்கத் தொடர்ச்சி...

வில்சன் பவர் & டிஸ்ட்ரிபியூஷன் டெக்னாலஜிஸ் நிறுவனம் தமிழ்நாட்டில் ஒரு புதிய மின்சார மின்மாற்றி உற்பத்தி மையத்தை நிறுவிட ரூ.300 கோடி முதலீடு மற்றும் 543 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. அதன் உற்பத்தியில் 80 முதல் 90 சதவிகிதத்திற்கும் அதிகமானவை புதுப்பிக்கத் தக்க எரிசக்தி திட்டங்களுக்குச் செல்கிறது. இது, தமிழ்நாட்டின் பசுமை எரிசக்தி உற்பத்தி மூலதனமாக மாறுவதற்கான நேரடியாக பங்களிப்பை அளிப்பதோடு, அதன் மாசற்ற தொழில்நுட்ப மதிப்புச் சங்கிலியை வலுப்படுத்தும்.

இந்தியாவின் முன்னணி ஜவுளி ஏற்றுமதி மையமாக தமிழ்நாட்டின் நிலையை வலுப்படுத்தும் வகையில், இங்கிலாந்தை தலைமையிடமாகக் கொண்ட பிரிட்டானியா கார்மென்ட் பேக்கேஜிங்கின் துணை நிறுவனமான பிரிட்டானியா RFID டெக்னாலஜிஸ் இந்தியா நிறுவனம், திருப்பூர் மற்றும் நாமக்கல்லில் அதிக திறன் கொண்ட RFID Tag உற்பத்தி பிரிவை அமைக்க ரூ.520 கோடி முதலீடு மற்றும் 550 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிடும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதன்மூலம், ஆடைத் துறையில் தடமறிதல் மற்றும் விநியோகச் சங்கிலி டிஜிட்டல் மயமாக்கலை ஆதரிப்பதோடு, ஏற்றுமதி போட்டித்தன்மையையும் அதிகரிக்கும்.

கல்வித் துறையில், கோயம்புத்தூரில் வடிவமைப்பு சார்ந்த உயர் கல்வி நிறுவனத்தைத் தொடங்க Ecole Intuit Lab நிறுவனம், சக்தி எக்சலன்ஸ் அகாடமியுடன் கூட்டாண்மையில் இணைந்து, புதுமை மற்றும் தனித்துவ அடையாளத்தின் (Branding) முக்கிய இயக்கியாக படைப்பாற்றல் பொருளாதாரம் மாறி வருவதால், இந்த முயற்சி தமிழ்நாட்டில் அடுத்த தலைமுறை படைப்பாற்றல் நிபுணர்களை உருவாக்கும்.

கல்வி ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக எக்ஸிடெர் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. கூட்டு ஆராய்ச்சி, ஆசிரியர் பரிமாற்ற திட்டங்கள் மற்றும் முன்னுரிமைத் துறைகளில் உலகளாவிய அறிவு பரிமாற்றத்தை வளர்ப்பதில் இந்த கூட்டாண்மை கவனம் செலுத்தும்.

இந்தச் சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், துறை ரீதியான ஒத்துழைப்பை மேம்படுத்தவும், உயர்தர சர்வதேச முதலீடுகளை ஈர்க்கவும், இந்தியா - இங்கிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை (Free Trade Agreement) தமிழ்நாடு பயன்படுத்திக் கொள்வதற்கான உறுதியான எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகும். FTA கட்டமைப்பிலிருந்து கிடைக்கும் கூடுதல் வாய்ப்புகளை ஆராய்ந்திட நேற்று முன்தினம் காலை பல கூடுதல் கூட்டங்கள் நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு.உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

கொளத்தூர் தொகுதியில் அனைத்துப் பணிகளையும் விரைந்து முடிப்பீர்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தல்!

சென்னை, செப். 5 - கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் நடைபெற்று வரும் அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்காக அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (03.09.2025) சென்னை, கொளத்தூர் சட்டமன்ற தொகுதி, ரெட்டேரி சந்திப்பில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் "குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தம்", கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் "மக்கள் சேவை மையம் (Citizen Service Centre)", கொளத்தூர் நவீன சந்தை (Kolathur Modern Market), பெரம்பூர், பேப்பர் மில்ஸ் சாலையில் ராஜா தோட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள் அருகில் மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டு வரும் ராஜா தோட்டம் பல்நோக்கு மையம், கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் மாநகராட்சி சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் மின் மயானம் மற்றும் கொளத்தூரில் மாநகராட்சி சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் தாங்கல் மின் மயானம் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் முன்னேற்றப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது மேயர் ஆர்.பிரியா, முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ. தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர் பாலமுருகன், மாநகர் போக்குவரத்துக் கழக பொது மேலாளர் (வடக்கு) ராஜசேகர் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஐசிஎப்.முரளிதரன், சந்துரு, மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி. அமுதா, திருமதி.யோகப்பிரியா, திருமதி.ஸ்ரீதணி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

திரு.வி.க.நகர் வடக்கு பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் தாயார் மறைவு!

சென்னை, செப். 5 – சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் அவர்களின் தாயார் செ.முருகம்மாள் (வயது 84) அவர்கள் நேற்று முன்தினம் (3.9.2025 புதன்கிழமை) அதிகாலை 4.30 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், சசிகாந்த் செந்தில் எம்.பி., ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., ஈரோடு இறைவன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், தண்டலம் கிருஷ்ணமூர்த்தி மற்றும் கலந்து கொண்டு அன்னாரின் உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் ஆத்திப்பட்டு, எதப்பட்டு ஊராட்சிகளில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச்செல்வன், ஒன்றியப் பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெய்சங்கர், சீத்தாலட்சுமி உள்ளனர்.